Registered as a News paper in Sri Lanka · பக்கங்கள் 04 · விலை ரூபா: 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM · Peoples Daily · மக்கள் தினசரி

நாதம் 02 · ஏப்ரல் · ( 21 - 04 - 1991 ) · ஞாயிற்றுக்கிழமை · ஓசை 62

## வைத்திய பட்டதாரிகள் நியமனம் இடைநிறுத்தம்

(கொழும்பு)

மருத்துவ பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்பட்ட முறையை ஆட்சேபித்து அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் மனித உரிமை மீறல், தடை உத்தரவு ஆகிய இரு வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளது. இதேவேளை மருத்துவ பீடங்களிலிருந்து வெளியேறிய பட்ட தாரிகளுக்கு வழங்கிய நியமனங்களை இடைநிறுத்தியுள்ளதாக (4ஆம் பக்கம் பார்க்க)

# பரப்புக்கடந்தான், லெப்.கேணல் கிரேசி வீரமரணம் ஒன்பது இராணுவம் பலி; 20 பேர் படுகாயம்!

(மன்னார்)

மன்னார் மாவட்டம் பரப்புக்கடந்தானில் நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகளுக்கும், சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் ஏழு மணி நேரமாகக் கடும்மோதல் இடம்பெற்றது. சிறிலங்கா இராணுவத்தினருக்கு உதவியாக விமானப்படை விமானங்களும் தாக்குதலை மேற்கொண்டன. இம்மோதலில் லெப். கேணல் கிரேசி உட்பட நான்கு புலிகள் வீரமரணமடைந்தனர். இராணுவ தரப்பில் பலத்த சேதமேற்பட்டது.

இம்மோதல் சம்பவத்தை ஊர்ஜிதப்படுத்திய சிறிலங்கா இராணுவ வட்டாரங்கள் ஒன்பது இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், இருபது பேர் படுகாயமடைந்ததாகவும் அறிவித்துள்ளது.

பரப்புக்கடந்தானில் நின்ற இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் காலை 9 மணியில் இருந்து கடும் மோதல் ஆரம்பமானது. இம்மோதல் மாலை நான்கு மணி வரையிலும் நீடித்தது.

இராணுவத்தினருக்கு உதவியாக சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் ஒரு அவ்ரோவிமானம், இரண்டு ஹெலிகொப்ரர்கள் என்பனதொடர்ச்சியான தாக் (4ஆம் பக்கம் பார்க்க)

# மனித உரிமையை சிறிலங்கா மீறியது

## ஐ.நா.மனித உரிமைக் குழு முன் சிறிலங்கா சட்டமா அதிபர்

(நியூயோர்க்)

**மக்களின் அரசியல், குடியியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச நியமங்களை சிறிலங்கா மீறியுள்ளதாக சிறிலங்காவின் சட்டமா அதிபர் சுனில் டீ சில்வா ஐ. நா. மனித உரிமைகள் குழுவின் விசாரணையின் போது ஒப்புக் கொண்டார்.**

சிறிலங்காவில் மனிதஉரிமைகள் மீறப்படுவது பற்றிப் பல கேள்விக்கணைகளை ஐ. நா. மனிதஉரிமைகள்குழுசட்டமா அதிபர் சுனில் டி. சில்வா மீது தொடுத்தது. பதினெட்டுப் பேர் அடங்கிய மனித உரிமைகள் குழு இரண்டு நாட்கள் தொடர்ச்சியாக சுனில் டி. சில்வாவை விசாரித்தது. ஜே. வி. பி.யின் ஏழு ஆண்டுகள் தொடர்ச்சியான கிளர்ச்சி, பிரிவினை வாதம் ஆகியவற்றின் பின்னணியிலேயே மனித உரிமை மீறல்களை அணுக வேண்டும் என சட்டமா அதிபர் சுனில் டி சில்வா கூறி மழுப்பியிருக்கிறார்.

நியூயோர்க்கில் நடந்த மேற்படி கூட்டத்தில் பிரச்சினைக்குரிய விஷயங்களான அவசர காலச் சட்டம், 17ஆவது அரசியல் அமைப்புச் சட்டத்திருத்தம், ஆள் கொணர்வு மனு, 1979ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் ஆகியன பற்றி சட்டமா அதிபரிடம் விளக்கம் கேட்கப்பட்டது.

அரசியல் குடியியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச நியமங்களை சிறிலங்கா மீறி உள்ளதை ஒப்புக்கொண்ட சட்டமா அதிபர் நாட்டு நிலைமை காரணமாக அவசரகாலச் சட்டத்தை அமு (4ஆம் பக்கம் பார்க்க)

## லெப். கேணல் கிரேசிக்கு ஆயிரக்கணக்கானோர் அஞ்சலி

மன்னார் பரப்புக்கடந்தான் பகுதியல் சிறிலங்கா இராணுவத்துடன் நேற்று முன்தினம் நடைபெற்ற மோதலில் வீரமரணமடைந்த லெப். கேணல் கிரேசியின் (கண திப்பிள்ளை கோபாலபிள்ளை, வட்டக்கச்சி) புகழுடல் கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட விசேட மேடையில் நேற்று மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. இந்த மண்ணுக்காகப் போராடி தன்னுயிரை அர்ப்பணித்த இந்த மாவீரனுக்கு அஞ்சலி செலுத்திட ஆயிரக்கணக்கில் தமிழீழ மக்கள் திரண்டனர். இந்து மகா



வி[illegible] புகையிரத நிலைய வீதி ழியாக கோண்டாவில் சந்திக்கு எடுத்து வரப்பட்ட லெப்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியத் தூதரகம் முன் லண்டனில் ஆர்ப்பாட்டம்

(லண்டன்)

இந்தியத் தூதுவரகத்திற்கு முன்பாக சுமார் நாற்பது பேர் அடங்கிய குழுவொன்று கடந்த 5 ஆம் திகதியன்று ஆர்ப்பாட்டம் நடத்தியது. சுமார் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக தூதுவரகத்தின் முன்பாக இவர்கள் சத்தியாக்கிரகம் செய்தனர். இதன் பின்னர் இந்தியத் தூதுவரிடம் மகஜர் ஒன்றையும் இவர்கள் கையளித்தனர்.

இம் மகஜரில் தமிழர் தாயகப் பகுதியில் இடம்பெறும் மோதல்களை முடிவுக்குக் கொண்டுவர இந்தியா தனது (4ஆம் பக்கம் பார்க்க)

## வினா விடைப் பத்திரங்கள் யாழ். வந்து சேர்ந்தன

(யாழ்ப்பாணம்)

சிலதினங்களில் ஆரம்பமாக உள்ள க. பொ. த. (உ/த பரீட்சைக்கான வினாப்பத்திரங்களும், விடைத்தாள்களும் நேற்றிரவு இரண்டு லொறிகளில் யாழ். கல்வித் திணைக்களத்திற்கு எடுத்துவரப்பட்டு உள்ளன.

## க. பொ. த. (உயர்தரம்) பரீட்சை நேர அட்டவணை

நாளை மறுதினம் ஆரம்பமாக இருக்கும் க. பொ. த. (உயர்தரம்) விசேட பரீட்சைக்கான கால அட்டவணையின் இரண்டாம் கட்டம் வெளிவந்துள்ளது. மேமாதம் இரண்டாம் திகதிமுதல் 18ஆம் திகதி வரைக்குமான கால அட்டவணையுடன் சகல பாடங்களுக்குமான வினாத்தாள்களும் வந்து சேர்ந்துள்ளன. இக்கால அட்டவணை பின்வருமாறு:-

| | | |
|---|---|---|
| 02-05-91 | 8-30 - 11-30 | பொருளியல்-II |
| | | மலாய்-II |
| | | பேர்சியமொழி-II |
| | | ஹிந்தி-II |

(4-ம் பக்கம் பார்க்க)

## நாரையந்தன்குளத்தில் 3 தமிழர் சுட்டுக்கொலை

(திருக்கோணமலை)

சிறிலங்கா இராணுவத்தினர் திருகோணமலை மாவட்டத்தில் மூன்று தமிழ்ப்பொது மக்களைச் சுட்டுக்கொன்றுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை கட்டைபறிச்சான் இராணுவ முகாமைச்சேர்ந்த சிறிலங்கா இராணுவத்தினர் கதிர்காமத்தம்பி பராசிங்கம், (வயது47) பத்தினியன் செல்வக்குமார், (வயது 22) தில்லைநாதன் பவளகாந்தன் (வயது 20) ஆகியோரை நாரையந்தன் குளத்தில்வைத்துச் சுட்டுக் கொன்றுள்ளனர்.

## இடம்பெயர்ந்தோருக்கு சுழற்சிமுறை நிவாரணம்

அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் இராணுவ முகாப் பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்த மக்களுக்குச் சுழற்சி முறையில் வழங்கவுள்ள நிவாரணத்தின் 2 ஆம் கட்டம் எதிர்வரும் செவ்வாயன்று (-3.4 9.) காலை ஒன்பது மணி முதல் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் வைத்து வழங்கப்படவுள்ளது. மயிலிட்டி வடக்கு (யா 216), பலாலி கிழக்கு (யா/251), பலாலி வடமேற்கு (யா/255) பலாலி தெற்கு (யா 252 குரும்பசிட்டிகிழக்கு (யா 243) ஆகிய கிராமசேவகர் பிரிவுகளைச்சேர்ந்தவர்கள்பங்கீட்டு அட்டைகளுடன் சமுகம்தரும்படி தமிழர் புனர்வாழ்வுக்கழகம் விடுத்த செய்திக்குறிப்பில் கோரப்பட்டுள்ளது.

## வேலை வழங்கித் தண்டம் அறவிடத் திட்டம்

(கொழும்பு)

அபராதம் செலுத்தாமல் சிறைக்குச் செல்லும் குற்றவாளிகளை அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத் தாபனங்கள் ஆகியவற்றில் வேலைக்கமர்த்தி அத் தண்டனைத் தொகையை அறவிட்டுக் கொள்வதற்கான புதிய திட்டமொன்று அமுலாக்கப்படவுள்ளது.

இவ்வாறு அபராதம் செலுத்தாமல் சிறைக்குச் செல்பவர்களால் அந்த அபராதத் தொகை கிடைக்காமல் போவதுடன் அவர்களின் ஜீவனாம்சத்துக்காக அரசாங்கம் பருந்தொகையான பணத்தைச் செலவு செய்ய வேண்டியேற்படுவதாகவும், இதனால் இரண்டு வழிகளிலும் நஷ் (4ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்


### கல்வி

புலமைப் பரிசில் வகுப்பிலிருந்து O/L வரைகட்டாயபாடமாகிய கணித பாடத்தினை 24 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் ஆரம்பஅறிவிலிருந்து விசேடசித்தி க்கு 40 மணித்தியாலத்திற்குள் கற்பிக்கப்படும். A/L வரை சகலபாடங்களும் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை லோகேந்திராவீதி, சுண்டுக்குளி (R/1341)

### பழைய புத்தக விற்பனை நிலையம்

பழைய புத்தகங்கள் கொப்பிகள் பேப்பர், போத்தல், செம்பு பித்தளை, கோழித்தீன் சீமெந்து உறைகள், உரப்பைகள் வாங்கப்படும், விற்கப்படும். சேனாதிராசா பழைய புத்தக விற்பனை நிலையம், 57 ஸ்ரான்லி றோட், (இலங்கை வங்கி முன்லேன்) யாழ்ப்பாணம். (B 2301)

### தவறிவிட்டது

தி. சிறிநாதன் என்பவருடைய கடவுச் சீட்டுடன் இரண்டு கடிதங்களும் கொடிகாமம் கச்சாய்ப் பகுதிக்கும் சாவகச்சேரி நகர்ப்பகுதிக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. யாராவது இதனைக் கண்டெடுத்தால் ஈழநாதம் காரியாலயத்தில் அல்லது விக்கினேஸ்வரா ஸ்ரோர்ஸ் (மார்க்கட் உட்புறம்) சாவகச்சேரி என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (B-2397)


# பாகிஸ்தான் உதவியில் வெட்டு

(வாஷிங்டன்)

பாகிஸ்தான் தனது அணுவாயுத திட்டங்களை நிறுத்திக் கொள்ளாவிட்டால் அந்நாட்டிற்காக வழங்கப்படும் உதவியை 20 கோடி டொலர்களுக்கும் அதிகமாக குறைத்திட வேண்டும் என்று ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்திற்கான அமெரிக்க பிரதிநிதிகள் சபையின் துணை நிர்வாகக் குழு யோசனை தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு உதவி கோரியுள்ள ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் வேண்டுகோளை அமெரிக்க காங்கிரஸ் குழுக்கள் பெருமளவில் ஆமோதித்துள்ளன. ஆனால் பாகிஸ்தானுக்கான அனைத்து உதவியையும் நிறுத்தி விடுவது என்பதில் உறுதியாக இருக்கிறது.

இதேநேரம் துருக்கிக்கான திட்டமிடப்பட்ட அதிகரிப்பையும் அது குறைத்து விட்டது.

## சாறி அன்பளிப்பு

(கொழும்பு)

புதன்கிழமையன்று தனது 75ஆவது பிறந்ததினத்தைக் கொண்டாடிய எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு தமிழ் காங்கிரஸ் உப-தலைவர் மோதிலால் நேரு நீலநிறச் சாறி ஒன்றை பிறந்தநாள் அன்பளிப்பாக வழங்கினார் இவர் அன்பளிப்பை நேரில்சென்று வழங்கிப் பிறந்தநாள் வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

அர்த்தமில்லாத இந்த யுத்தம் நிறுத்தப்படவேண்டும் என்றும், நிரந்தரத் தீர்வு காணும் நடவடிக்கைகளுக்கு தமது பங்களிப்பை வழங்கத் தயார் என்றும் சிறிமாவோ கூறியதாக மோதிலால் கொழும்பில் தெரிவித்தார்.

## ஆசிரிய ஆலோசகர் வீடு சேதம்

(வவுனியா)

வவுனியா ஆசிரிய ஆலோசகர் ஒருவரின் வீடு பொம்மர் தாக்குதலினால் முற்றாகச் சேதம் அடைந்துள்ளது.

சமீபத்தில் பம்பைமடு பகுதியில் பொம்மர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட சமயம் வவுனியா மாவட்ட கணிதபாட ஆசிரிய ஆலோசகர் தி சிவதாசனின் வீடு முற்றாகச் சேதமடைந்தது,

## தமிழ்ப் பேராசிரியராக தில்லைநாதன்

(கொழும்பு)

தமிழ்ப் பேராசிரியராக தில்லைநாதன்பதவியேற்றுள்ளார் இலங்கைப் பல்கலைக் கழகத்தின் தமிழ் சிறப்புப் பட்டதாரியான பேராசிரியர் தில்லைநாதன் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப்பேராசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## பதிவாளர் போட்டிப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

நீதிமன்றப் பதிவாளர் தரம் இரண்டிற்கான போட்டிப் பரீட்சை எதிர் வரும் 27ஆம் 28ஆம்திகதிகளில்கொழும்பில் நடைபெறவுள்ளன

இப் பரீட்சைக்கு விண்ணப்பித்தோருக்கான அனுமதிஅட்டைகள் மேற்படி பரீட்சை ஆணையாளரினால் சகலபரீட்சார்த்திகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

யாழ் மாவட்டத்திலிருந்து இப்பரீட்சைக்குப் பலர்தோற்றவுள்ளனர் (ச)

## பம்பாயில் 6 பேர் பலி

(பம்பாய்)

பம்பாயில் ஏற்பட்ட குண்டு வெடிப்புச் சம்பவத்தில் ஆறு பேர் கொல்லப் பட்டுள்ளார்கள். இக் குண்டு வெடிப்பின் போது பஸ்தரிப்பு நிலையத்திற்கு அருகில் இருந்த கட்டடம்ஒன்றுபெரும்சேதத்திற்குள்ளானது வெடித்தகுண்டுபஸ் வண்டிக்குள் வைக்கப்பட்டிருந்ததாகத் தெரியவருகின்றது. இறந்தவர்களில் ஐந்து பேர் பம்பாய் நகரபோக்குவரத்துச் சாலை ஊழியர்கள் ஆகும்.


## பிறந்த நாள் வாழ்த்துக்கள்

தம்பிராய் பூநகரியைச் சேர்ந்த பத்மநாதன் வசந்தா தம்பதிகளின் செல்வப் புதல்வன் ஸ்ரீபன் இன்று தனது முதலாவது பிறந்த தினத்தை தனது இல்லத்தில் சிறப்பாக கொண்டாடுகின்றார். இவரை அப்பா அம்மா குடும்பத்தினர். உறவினர்கள் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தம்பிராய், பூநகரி. (B-2396) - பெற்றார்.

## ஒட்டுநர் தேவை

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ் கிளை

மேற்கூறப்பட்ட சங்கத்தில் ஒட்டுநர்கட்கு வெற்றிடங்கள் உண்டு.

எனவே தகுதியுடையோர் தங்கள் விண்ணப்பங்களை மேற்குறிப்பிட்ட விலாசத்திற்கு 26. 04. 91 பிற்பகல் 3 மணிக்கு முன் சமர்ப்பிக்கவும்.

கடித உறையில் இடது மூலையில் 'ஒட்டுநர் விண்ணப்பம்'' எனக் குறிப்பிடவும்.

(B-2394) தலைவர்

## மாதாந்த பயிற்சிப் பரீட்சை
# இலவச கருத்தரங்கு

நேர அட்டவணை.

**A/L 91**

பரீட்சை: 26-04-1991

| முற்பகல் பரீட்சை | | பிற்பகல் கருத்தரங்கு | |
|---|---|---|---|
| 8-00 | Chemistry I | 1-00 | Chemistry |
| 9-00 | Physics I | 2-00 | Physics |
| 10-00 | Zoology I | 3-00 | Zoology |
| 10-00 | Pure Maths I | 3-00 | Pure Maths |
| 11-00 | Botany I | 4-00 | Botany |
| 11-00 | Applied Maths I | 4-00 | App. Maths |

ஆண்டு 5 (புலமைப் பரிசில் போட்டிப் பரீட்சை)

பரீட்சை: 28-04-1991

| பரீட்சை | | கருத்தரங்கு | |
|---|---|---|---|
| 1-00 | தமிழ் | 4-00 | தமிழ் |
| 2-15 | கணிதம் | 5-00 | கணிதம் |

**O L Dec. 90**

பரீட்சை: 29-04-1991

| முற்பகல் பரீட்சை | | பிற்பகல் கருத்தரங்கு | |
|---|---|---|---|
| 7-00 | வர்த்தகம் I | 1-45 | விஞ்ஞானம் |
| 8-00 | கணிதம் I | 2-30 | கணிதம் |
| 9-00 | விஞ்ஞானம் I | 3-15 | தமிழ் |
| 10-00 | தமிழ் I | 4-00 | சமூகக்கல்வி |
| 11-00 | சமூகக்கல்வி I | 4-45 | ஆங்கிலம் |
| 12-00 | ஆங்கிலம் I | 5-30 | வர்த்தகம் |

**O,L Dec. 91**

பரீட்சை: 29-04-1991

| முற்பகல் பரீட்சை | | பிற்பகல் கருத்தரங்கு | |
|---|---|---|---|
| 7-00 | வர்த்தகம் I | 1-45 | தமிழ் |
| 8-00 | கணிதம் I | 2-30 | சமூகக்கல்வி |
| 9-00 | விஞ்ஞானம் I | 3- 5 | கணிதம் |
| 10-00 | தமிழ் I | 4-00 | விஞ்ஞானம் |
| 11-00 | சமூகக்கல்வி I | 4-45 | வர்த்தகம் |
| 12-00 | ஆங்கிலம் I | 5-30 | ஆங்கிலம் |

★ ஆசனங்கள் வரையறுக்கப்பட்டுள்ளதால் முன் கூட்டியே பதிவுசெய்து, சுட்டெண்களைப் பெற்றுக் கொள்ளவும்.

மேலதிக விபரங்களுக்கு:

EXAMINATION UNIT,

**BOND INSTITUTES**

58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

(B 2391)


# நினைவு கூருகின்றோம்...

**1991-04-21**

1986 ஆம் ஆண்டு இதேதினத்தில் புலிபாய்ந்த கல்லில் சிறிலங்காப் படையினருடனான நேரடி மோதலில் வீரமரணமடைந்த

**நிர்மலன்** (குணரட்ணம் தனபாலசிங்கம் - ஏறாவூர்)

1988 ஆம் ஆண்டு மயிலியதனையில் இந்தியப் படையினரின் சுற்றி வளைப்பின் போது வீரமரணமடைந்த

**2ஆம் லெப். தம்புக்கிளி**

(மாணிக்கம் பாலச்சந்திரன் - வல்வெட்டித்துறை)

ஆகியோரை

இந்நாளில் நினைவு கூருகின்றோம்

மாவீரர்களாய் இம் மண்ணில்
மரணித்த வேங்கைகளே!
விடுதலைப் பயிருக்கு நீரென
குருதியைப் பாய்ச்சியோரே!
உங்கள் கையிலிருந்தும் விழ்ந்த
ஆயுதங்கள ஓய்ந்து விடவில்லை
உங்கள் எண்ணங்களை ஈடேற்ற
இங்கேயோர் படையணி – ஆதலால்
இவ் வையகம் வாழும் வரை
உம் நாமம் வாழும்.

- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B/ 2388)


## சாயி அக்குபங்சர் சிகிச்சை நிலையம்

★ வாதம்

★ ஆஸ்த்மா

★ மூட்டுக்காய்ச்சல்

★ நீண்டநாள் மனநோய்கள்

மற்றும்

மாற்றமுடியாது எனக் கணிக்கப்பட்ட நீண்ட நாட்கள் கொண்ட எந்த வகையான நோய்களாக இருந்தாலும்

"வர்மானிய அலகு முறைச் சிகிச்சை"

எனப்படும் தமிழ் அக்குபங்சர் சிகிச்சை மூலம் சிகிச்சையளிக்கப்படும்

வைத்திய கலாநிதி V. P. சுந்தரராஜன்

(விசேட அக்குபங்சர் சிகிச்சை நிபுணர்)

இல: 10 பருத்தித்துறை வீதி, யாழ்நகர்.

குறிப்பு: முழுக்க முழுக்க தமிழ் முறையிலும் அதி நவீன முறையிலும் சிகிச்சை அளிக்கப்படும்.

(R-2129)

# ✻ சிந்தனைக்கு ✻

அபத்தம் பேசுவது கூட அவ்வளவு அருவருப்பானதல்ல; கொள்கைகளின் பெயரில், அபத்தம்பேசுவதுதான் அருவருப்பானது.

- ஜீன் ரோஸ் டேண்ப்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 21-04-1991
தொலைபேசீ
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண்: 05

# முடிவில் இருந்து தொடக்கத்திற்கு

வடக்கு கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடக்கூடிய வாய்ப்பை விடுதலைப்புலிகளுக்கு நாம் ஏற்படுத்தினோம். அப்பகுதியில் இருந்து ஜனநாயக ரீதியான ஆணையொன்றை அவர்கள் பெற்றிருந்தால் சட்ட பூர்வமான பிரதிநிதிகள் என்ற வகையில் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளைத் தொடரக்கூடிய வாய்ப்புக்கள் ஏற்பட்டிருக்கலாம் என நேற்று முன்தினம் பாராளுமன்றக் கூட்டத் தொடரைச் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்துப் பேசிய சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்தார்.

சிறிலங்கா ஜனாதிபதியின் இக்கூற்றானது உண்மைக்குப் புறம்பானதும், அர்த்தமற்றதும் ஆகும். இந்திய இராணுவம் வடக்கு கிழக்கில் நிலைகொண்டிருந்தபோதும் சரி, அதன் பின்னரும் சரி, சிறிலங்கா ஜனாதிபதிக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தைகளின் போதும், ஆறாவது திருத்தச் சட்டம் நீக்கப்பட்டாலே தாம் தேர்தலில் போட்டியிடுவோம் என விடுதலைப் புலிகள் அறிவித்து வந்தனர். ஆனால் இன்றுவரை அத்திருத்தச் சட்டம் நீக்கப்படவில்லை. இந்நிலையில், விடுதலைப் புலிகள் தேர்தலில் போட்டியிடுவதற்கான வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது என்ற சிறிலங்கா ஜனாதிபதியின் கூற்று உண்மைக்குப் புறம்பானதோடு ஒரு ஏமாற்றுக் கதையுமாகும்.

மேலும், இந்திய - சிறிலங்கா சமாதான உடன்படிக்கையினால் உருவாகிய மாகாணசபைகள் அமைப்பிற்கு இந்திய இராணுவம் வடக்கு கிழக்கில் நிலைகொண்டிருந்த போது ஜனநாயக தேர்தல் முறைகளுக்கு அப்பாற்பட்ட விதத்தில் தேர்தல் நடைபெற்றது. இதன் பிற்பாடு ஜனநாயக ரீதியான தேர்தல் எதுவும் நடைபெறவில்லை. இந்நிலையில், விடுதலைப்புலிகளுக்கு தேர்தல் மூலம் சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டது என்பது முழுப்பூசனிக்காயைச் சோற்றில் புதைக்கும் முயற்சிக்கு ஒப்பானதாகும்.

தேர்தல் மூலம் தமது நிலையை விடுதலைப்புலிகள் சட்ட பூர்வமாக்குவதும், மக்கள் அதனை அங்கீகரிப்பதும் ஒருபுறம் இருக்கட்டும். இலங்கையில் ஆங்கிலேயர் இருந்த காலம்தொட்டே இலங்கைத் தமிழர் தமது அபிலாஷைகளை நிறைவேற்றுமாறு சட்ட பூர்வமான பிரதிநிதிகளை இலங்கைப் பாராளுமன்றத்திற்கு 1977ஆம்ஆண்டு வரையும் அனுப்பி வந்துள்ளார்கள். ஆனால், தமிழரின் ''சட்ட பூர்வமான'' பிரதிநிதிகளின்கோரிக்கைகள், போராட்டங்கள் எவையும் தமிழருக்கான உரிமைகளைப் பெற்றுக் கொடுக்கவில்லை. சட்ட பூர்வமான பிரதிநிதிகளின் போராட்டம் உச்சக் கட்டங்களை அடையும்போது பேச்சுவார்த்தை, கருத்துப்பரிமாறல், மகாநாடுகள், ஒப்பந்தங்கள் என்பனவற்றை ஏற்பாடுசெய்து தமிழர் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டுக்கொண்டே வந்தார்கள்.

''சட்ட பூர்வமான தமிழ்ப் பிரதிநிதிகள்'' சிங்களப் பேரினவாதத்தினால் உதாசீனம்செய்யப்பட்டு, வலுவிழந்த நிலையிலேயே ஆயுதப் போராட்டங்கள் முனைப்புப் பெற்றன. தமிழர் உரிமைக்காக ஆயுதமேந்திப் போராட முன்வந்தார்கள். இவர்களின் சுதந்திரப் போராட்டத்தை வழி நடத்தும் ஓரேஒரு சக்தியாக இன்று விடுதலைப் புலிகள் மட்டுமே உள்ளனர்.

இந்நிலையில், சட்ட பூர்வமான பிரதிநிதிகளுடன்தான் பேச்சுவார்த்தை என்பது இப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வு காண்பதில் சிறிலங்கா ஜனாதிபதிக்கு அக்கறையில்லை என்பதையே காட்டுகின்றது.

சட்டபூர்வமான பிரதிநிதிகளுடன்தான் பேச்சுவார்த்தை என்றால் ''சிறிலங்கா ஜனாதிபதியின் அகராதியிலுள்ள தமிழரின் சட்டபூர்வமான பிரதிநிதிகள்'' கொழும்பில் அவர்களின் காலடியிலேயே பாதுகாப்பாகவுள்ளனர். அவர்களுடன் பல மாதங்களாகப் பேச்சுவார்த்தையும், மகாநாடும் நடத்திய சிறிலங்கா ஜனாதிபதி குறைந்தளவு தீர்வையாவது முன்வைத்திருக்கலாமே? ஏன் வைக்கவில்லை? தமிழர்களின் பிரதிநிதிகள் அவர்கள் அல்ல என திரு. பிரேமதாசா கருதுகின்றாரா? அல்லது அவர்களுடன் பேசிப் பிரயோசனம் இல்லை என அவர் ஏற்றுக் கொள்கின்றாரா? இவை யாவும் உண்மையாக இருப்பினும், இதற்கும் மேலான ஓர் உண்மையுண்டு. எதைப் போட்டாலும் கௌவிக் கொள்வதற்கு ''சட்ட பூர்வமான தமிழ்ப் பிரதிநிதிகள்'' இருக்கும்போது எதைப் போடுவதற்கும் அவர் தயாராக இல்லை என்பதே ஆகும்.

அதேவேளை இன்றும் சிறிலங்கா அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்திப் புரியவைக்கவேண்டிய விடயம் எதுவும் தமிழருக்கு இல்லை. தமிழர்கள் என்ன கோருகின்றார்கள். அவர்களது அபிலாஷைகள் என்ன என்பது பல தடவைகள் பலராலும் சிறிலங்கா அரசாங்கத்திற்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளது. இந்நிலையில் இனப் பிரச்சினைக்கான தீர்வாக சிறிலங்கா அரசாங்கம் எந்தத் திட்டத்தை அறிவிக்கப் போகின்றது என்பதே இன்றைய நிலையாகும். இத்திட்டம் தமிழர் தரப்பில் ஏற்புடையதாக இருந்து, தமிழர் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் தமிழர் பிரதிநிதிகள் யார் என்று சட்ட பூர்வமாக நிரூபிக்க வேண்டிய அவசியம் ஏற்படுமாயின் அதனைத் தமிழ் மக்கள் அன்று தீர்மானிப்பார்கள்.

# பழைமைவாத சிந்தனைகளுக்கு முற்றுப்புள்ளிவைத்த அன்னைபூபதி

-ஜெயா


(நமது நிருபர்)

இந்திய இராணுவத்தின் ஆக்கிரமிப்பின் பிடியில் தமிழீழம் அல்லலுற்றிருந்த வேளையில் எமது சமுதாயத்தின் பழைமைவாத சிந்தனைகளுக்கும், பிற்போக்குவாத வியாக்கியானங்களுக்கும் முற்றுப்புள்ளி வைத்ததுடன், அவற்றை பொடிப் பொடியாக்கியவர் அன்னை பூபதியாகும் என நேற்றுமுன்தினம் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் இடம்பெற்ற அன்னை பூபதி நினைவுதின கூட்டத்தில் பேசும்போது விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் ஜெயா கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், இந்த நாட்டில் இளைய சமுதாயம்தான புரட்சிகரமான போராட்டத்தில் ஈடுபட முடியும். இளம் சமுதாயமே ஆயுதமேந்தி போராடி ஒருபெரும் மாற்றத்தை தாங்கும் சக்தியை கொண்டுள்ளது என்ற எண்ணப்பாட்டை மாற்றி அமைத்ததுடன் மூத்தோர்களின் பங்களிப்பின் மூலம் போராட்டத்தில் பெரும் புரட்சிகர சக்தி ஒன்றை ஏற்படுத்தி அதனை தாங்கும் திறமை உண்டு என வெளிப்படுத்தியவர் அன்னை பூபதி என்றார்.

இன்று நாம் உலகில் நடைபெற்று முடிந்த போராட்டங்களை எடுத்து நோக்குவோமானால் ஆயுதம் ஏந்திய மிகப்பெரும் சக்தியான ஒரு இராணுவத்திற்கெதிராக தனது நாட்டிற்காக போராட்டம் செய்தவர்களில் உலகின் முதல்பெண்மணி அன்னை பூபதியாவார்.

உலகில் இன்றுவரை விடுதலைப் போராட்ட இயக்கங்களுடன் இணைந்தவர்களே பெரும் உண்ணாவிரதப் போராட்டங்களில் ஈடுபட்டு தமது



ஜெயா

உயிரைத் தியாகம் செய்தனர். தென் இந்தியாவின் பொட்டி ராமுலுவாக இருந்தாலும் சரி, வட அயர்லாந்தின் பொபி சாண்டஸ் ஆக இருந்தாலும் சரி இவர்கள் போராட்ட இயக்கங்களுடன் தம்மை நேரடியாக இணைத்துக் கொண்டவர்கள். ஆனால் ஒரு சாதாரண பழைமைவாத போக்கும் பிற்போக்கு கொள்கைகளும் கொண்ட ஒரு சமுதாயத்திலிருந்து வந்த பெண்மணி ஒருவர் தனது நாட்டிற்காகவும் போராளிகளுக்கு முன்னுதாரணமாகவும், இருந்து போராடி தியாக மரணமடைந்த நிலையானது உலகின் பல்வேறு இயக்கங்களிலும் இணைந்து இருக்கும் போராளிகள் கூட தலைவணங்கவேண்டிய நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது.

உலகில் இன்று அரசியல் சுதந்திரம் பெற்ற நாடுகள் எவையும் பூரண விடுதலை பெற்றுக் கொள்ளவில்லை. சிறிலங்கா அரசு 1948ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்ற போதிலும் இன்று தனது பொருளாதார அபிவிருத்திக்காயினும் சரி, எம்மை நசுக்க இராணுவ பலம் பெற்றுகொள்வதாக இருந்தாலும் சரி இன்று அந்நிய ஏகாதிபத்திய நாடுகளையே கையேந்தி நிற்கவேண்டிய நிலை உள்ளது. இந்த நிலையிலிருந்து நாம் வேறுபட்ட ஒரு சுதந்திரமான தமிழீழ சுயஇராட்சியத்தை அமைக்க வேண்டும். இதற்காக எமது பொருளாதார வளங்களை அபிவிருத்தி செய்து நாட்டுக்குத் தேவையான உற்பத்திகளை செய்து எமது போராட்டம் முனைப்பு பெற்றுள்ள இவ்வேளையில் எல்லா மக்களும் பங்களிப்பு செய்ய வேண்டும். (க) (லோ)

## இருவர் காயம்

கட்டுத்துவக்கு தவறுதலாக வெடித்ததால் கை சிதறிய நிலையில் கிளிநொச்சி மதுர நகரைச் சேர்ந்த திரு.பி. அருணாசலம் (வயது 52) என்பவர் நேற்று முன்தினமிரவு யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதே தினம் நீர்வேலி சிறுப்பிட்டியைச் சேர்ந்த அருந்தவநாதன் (வயது 20) என்பவர் மரத்தால் விழுந்து காயமுற்ற நிலையில் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (மு)

## வாடிக்கையாளர் அசௌகரியம்

தேசிய சேமிப்பு வங்கியின் யாழ். கிளையில் வாடிக்கையாளர்கள் பல அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜெனரெட்டரின் உதவி பகல் 1 மணிக்கு கிடைக்கும் வரை வாடிக்கையாளர்களின் அலுவல்கள் தாமதப்படுத்தப் படுகின்றனவாம்.

பணவைப்பீட்டுப் பகுதி விநியோகப்பகுதி இரண்டிலும் ஒரே உத்தியோகத்தர் சேவையாற்றுவதால் வாடிக்கையாளர்கள் மேலும் தாமதங்களுக்கு ஆளாக நேர்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (21)

## அறிவுறுத்தல் கூட்டம்

கல்விப்பொதுத்தராதர உயர்தர விசேட பரீட்சை தொடர்பாக சகல பரீட்சை நிலைய மேற்பார்வைக் குழுவினருக்குமான விசேட அறிவுறுத்தல் கூட்டம் 22 ஆம் திகதி நாளை திங்கட் கிழமை யாழ் இந்து மகளிர் கல்லூரியில் காலை 9.30 மணிக்கு நடைபெற உள்ளதால் சகலரும் தவறாது சமுகம் தரும்படி வேண்டப்படுகின்றார்கள் (க)

## கொர்பசேவ் - கைபூ

# தீர்வுகள் இல்லாமலே பேச்சு வார்த்தை முடிந்தது

(டோக்கியோ)

சோவியத் ஜனாதிபதி கொர்பசேவும், ஜப்பானிய பிரதமர் ரொசிக் கைபூவும் டோக்கியோவில் மூன்று நாட்களாக நடத்திய பேச்சுக்கள் இருநாடுகளுக்கும் இடையே நெடுங்காலமாக இருந்த பிரதேசங்கள் பற்றிய விடயங்களில் உடன்பாடு எதுவும் காணப்படாமலேயே முடிவடைந்தன.

கடந்த மூன்று நாட்களாக டோக்கியோவில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின் போதே இரண்டு தலைவர்களும் 12 ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டாலும் சோவியத் பொருளாதாரத்தில் ஜப்பானிய முதலீட்டிற்கோ அல்லது முக்கியமான பெரும் உதவித்திட்டத்திற்கோ உடன்பாடு ஏற்படவில்லை. அத்துடன் இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் சோவியத்யூனியனால் பிடித்து வைக்கப்பட்டுள்ள கொளிரீன் தீவு தொடர்பாகவோ உடன்பாடு எட்டப்படவில்லை.

# மீனவர் பிரச்சினை ஜா பேசவுள்ளார்

(சென்னை)

தமிழக மீனவர்களை சிறிலங்கா கடற்படையினர் துன்புறுத்தும் விவகாரத்தை நிறுத்துவது தொடர்பாக சிறிலங்கா அரசாங்கத்துடன் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் என். எம். ஜா. பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

நேற்று முன்தினம் தமிழக ஆளுநர் பீஷ்மநாராயண சிங்கை சந்தித்துப் பேசிய என். எம். ஜாவிடம் இது பற்றி ஆளுநர்கதைத்ததாகவும்சென்னையில் வெளியிட்ட பத்திரிகை குறிப்பொன்று தெரிவிக்கிறது.

தமிழக மீனவர்கள் சிறிலங்கா கடற்படையினரால் தாக்கப்பட்டும், மறித்து வைக்கப்பட்டும் வருகிறார்கள் என்று ஜாவிடம் ஆளுநர் தெரிவித்ததாகவும் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இம்முறை சம்பளம் பருத்தித்துறையில்

(யாழ்ப்பாணம்)

சகல திணைக்கள கூட்டுத்தாபன ஊழியர்களுக்கான சம்பளப்பணம் இம்முறை பருத்தித்துறையில் வைத்தே வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது சம்பந்தமாக சகல திணைக்கள, கூட்டுத்தாபன அதிகாரிகளையும் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ். இலங்கை வங்கி முகாமையாளர் கேட்டுள்ளார்.

இதுவரை காலமும் இவர்களுக்கான சம்பளப்பணம் இலங்கை வங்கியின் பிரதான கிளையில் வைத்தே வழங்கப்பட்டது. ஆனால் இனிமேல் பருத்தித்துறையில் கப்பலில் வைத்தே இவர்களுக்கு நேரடியாக வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ச)

# ஈராக் அரசாங்கத்துடன் குர்திஷ் 'தலைவர்கள் பேச்சு

(லண்டன்)

துருக்கியின் எல்லைப்பகுதியை ஒட்டிய ஈராக் பகுதிகள் சிலவற்றை குர்திஷ் இன மக்களுக்கான பாதுகாப்பு புகலிடம் அமைப்பதற்காக ஒதுக்கித் தருப்படி ஈராக் அரசிடம் அமெரிக்கா கோரியுள்ளது என மேற்குலக இராஜதந்திர வட்டாரங்களை மேற்கோள் காட்டி செய்திகள் வெளிவந்துள்ளன. நேற்று ஈராக் எல்லைப் பகுதியிலுள்ள சோதனைச் சாவடி ஒன்றில் நடந்த பேச்சுவார்த்தைகளில் சில நெருக்கடிகள் தோன்றியதாக அமெரிக்கத் தளபதிகள் கூறியுள்ளனர். எவ்வாறெனினும் குர்திஷ் இன மக்களுக்கு உதவும் திட்டத்தில் அமெரிக்கா விடாப்பிடியாகஉள்ளதாகவும் துருக்கியின் எல்லைப்பகுதிக்கு சென்ற பிரிட்டன் விமானப் படைத் தளபதியும் இத்திட்டத்திற்கு ஒப்புதல் தெரிவித்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை துருக்கிஎல்லையில் அமெரிக்காவின் நிவாரணப் பணிக்கான துருப்புக்கள் இறங்கியுள்ளன. சுமார் எழுநூற்றுக்கும் மேலான துருப்புக்கள் ஹெலிகொப்ரர்கள் மூலம் கொண்டுசெல்லப்பட்டுள்ளனர். 'நம்பிக்கை ஊட்டுதல்' என்று அமெரிக்காவின் இத்திட்டத்திற்குப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இப்படைப் பிரிவு துருக்கி எல்லையையொட்டி குர்திஷ் இன மக்களுக்கான அகதிமுகாம்களை அமைக்கும் பணியில் ஈடுபடும்.

இதனிடையில் குர்திஷ் தலைவர்களுக்கும் ஈராக்கிய அரசுக்கும் இடையே பக்தாத்தில் பேச்சுக்கள் ஆரம்பித்துள்ளன குர்திஷ்தானின் எதிர்காலம் குறித்து குர்திஷ் தலைவர்கள் சிலர் பேச்சு ஆரம்பித்திருப்பது பற்றி லண்டனிலுள்ள குர்திஷ்தான் ஜனநாயகக் கட்சியின் பேச்சாளர் ஒருவர் செய்தி வெளியிட்டுள்ளார்.

## பத்தேபூரில் வி. பி. சிங்

(புதுடில்லி)

முன்னாள் இந்தியப் பிரதமர் திரு. வி பி. சிங் உத்தரப் பிரதேசத்தின் பத்தேபூர் தொகுதியிலிருந்து ஜனதாதள் வேட்பாளராகப் போட்டியிடுவதற்கான வேட்பு மனுவை நேற்று தாக்கல்செய்துள்ளார். கடந்தமுறையும் இதே தொகுதியிலேயே வி.பி.சிங் போட்டியிட்டார்என்பதும் குறிப்பிடத்தக்கது.

## உயர்தர பரீட்சைக்கான விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த. (உ/த) பரீட்சை சம்பந்தமான விசேட கூட்டம் ஒன்று இன்றுகாலை பத்து மணிக்கு யாழ். கல்வித் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் சகல இணைப்பு அதிகாரிகளையும், உதவி இணைப்பு அதிகாரிகளையும் கலந்து கொள்ளுமாறு யாழ் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்

## வைத்திய

சுகாதார மகளிர் விவகார அமைச்சர் திருமதி ரேணுகா ஹேரத் தெரிவித்தார்.

வைத்திய அதிகாரிகள் சங்கம் தாக்கல் செய்துள்ள வழக்குத் தொடர்பாக சுகாதார அமைச்சு சட்டமா அதிபரின் ஆலோசனையைக் கேட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடங்களிலிருந்து வெளியேறிய மருத்துவப் பட்டதாரிகளுக்கு அந்தந்தப் பகுதியிலேயே நியமனம் வழங்கப்பட்டதை அடுத்தே இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளனவாம்.

## பரப்புக்கடந்தான்

குதலை மேற்கொண்டன.

கடுமையான விமானத் தாக்குதலுக்கு மத்தியிலும் விடுதலைப்புலிகள் எதிர்த்தாக்குதலை மேற்கொண்டனர். இத்தாக்குதலின்போது லெப். கேணல் கிரேசி உட்பட நான்கு புலிகள் வீரமரணம் அடைந்தனர். இராணுவத் தரப்பில் பலத்த சேதமேற்பட்டுள்ளதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## வேட்பாளர் பட்டியலில் இ. தொ. கா. புறக்கணிப்பு

(கொழும்பு)

இ.தொ. காவுக்கும், ஐ.தே. கவுக்கும் ஏற்பட்ட உடன்பாட்டின்படி நாவலப்பிட்டி நகர சபைக்குப் போட்டியிட இ. தொ.கா சார்பில் தெரிவு செய்யப்பட்ட திரு. தங்கவேல் என்பவரின் பெயர் ஐ.தே க வேட்பாளர் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை இது குறித்து இ. தொ. கா. தலைமைப்பீடம் ஐ தே. க. தலைமையகத்துடன் தொடர்பு கொண்ட போதும் சீர் செய்யப்படவில்லை. இவ்விவகாரம் பற்றி இ. தொ.கா. தலைவர் ஜனாதிபதியிடமும், ஐ.தே.க. பொதுச்செயலாளர் சிறிசேன குரேயிடம் நேரடியாக அதிருப்தி தெரிவித்திருப்பதாகத் தெரியவருகிறது

## லெப். கேணல்

கேணல் கிரேசியின் புகழுடல் பலாலி வீதிவழியாக உரும்பராய் சந்தியை அடைந்து அங்கிருந்துகோப்பாய் ஊடாக கைதடிக்கு எடுத்துவரபபட்டது. அங்கிரு து கண்டி வீதி வழியே ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்ட புகழுடல் சாவகச்சேரியை சென்றடைந்தது. பின்னர் கிளிநொச்சிக்கு இப்புகழுடல் கொண்டு செல்லப்பட்டது.

இன்று பிற்பகல் 3.00 மணியளவில் கிளிநொச்சியிலுள்ள மாவீரர் பயானத்தில் லெப் கேணல் கிரேசிக்கு இறுதி மரியாதை செலுத்தப்படும் எனவும் தெரிய வருகின்றது.

வீரமரணமடைந்த லெப், கேணல் கிரேசி திருமணமானவர். கடந்த வருடம் மே மாதம் இவரது திருமணம் நடைபெற்றது. விடுதலைப் புலிகள் இயக்கத்தில் அங்கம் வகிக்கும் சுகி என்ற பெண் போராளியையே இவர் திருமணம் செய்திருந்தார்.

கிரேசியின் தந்தை கணபதிப்பிள்ளை 28. 04. 88 இல் ஈ. பி. ஆர். எல் எப் இயக்கத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

## வேலை

டமே ஏற்படுகிறதென்றும் தெரிய வந்துள்ளது. இதனால் சிறைச்சாலைகளில் நிலவும் நெருக்கடி குறைந்து விடும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## லெப். கஸ்ரோவிற்கு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

சிலாவத்துறை சிறிலங்கா இராணுவமுகாம் மீதான தாக்குதலில் வீரமரணமடைந்த போராளி லெப். கஸ்ரோவின் 31ஆம் நாள் நினைவஞ்சலிக் கூட்டம் நேற்றுமாலை யாழ். மணிக்கூட்டு வீதியில் உள்ள ரசிகரஞ்சன சபா மண்டபத்தில் நடைபெற்றது.

நூற்றுக்கணக்கான மக்கள் பங்குகொண்ட இந்த அஞ்சலிக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியைச் சேர்ந்த திரு ஆஞ்சநேயர் மற்றும் மகளிர் முன்னணி உறுப்பினர், சிற்றூர், வட்ட அவை உறுப்பினர்கள் ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்தினர். இந்த வைபவத்தில் வீரமரணமடைந்த ஏனைய போராளிகளுக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது. (க)

## விஷம் தீண்டி வயோதிபர் மரணம்

(புங்குடுதீவு)

விஷம் தீண்டியதனால் வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார் இச்சம்பவம் நயினாதீவுப் பகுதயில் இடம்பெற்றுள்ளது. நயினாதீவு 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த செ. விசாகபெருமாள் (வயது 63) என்பவரே கடந்த சிலதினங்களுக்கு முன்னர் காணாக்கடிகடித்து உயிரிழந்துள்ளார். பிரஸ்தாப நபர் தபால் திணைக்களத்தில் சிரேஷ்ட அதிகாரியாக கடமையாற்றி ஓய்வு பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (22)

## இந்தியத்

நிர்ப்பந்தத்தைப் பிரயோகிக்க வேண்டுமெனவும், வட-கிழக்கு அகதிகளுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்க வேண்டுமெனவும் கோரிக்கைகள் விடப்பட்டு உள்ளதாக தெரிய வருகின்றது.

## மனித

லாக்கியதாகக் கூறினார்.

சிறிலங்கா அரசியல் அமைப்பில் கொண்டுவரப்படவிருக்கும் 17ஆவது திருத்தம் சமய வழிபாட்டு உரிமையைக் கட்டுப்படுத்தும் என்று மனித உரிமைகள் குழு சுட்டிக்காட்டியது

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் தற்காலிகமானதென்று அறிவிக்கப்பட்டபோதும் அது 1979இல் இருந்து இன்றுவரை ஏன் அமுலில் உள்ளது என்றும் கேட்கப்பட்டது. இந்தக் கேள்விக்குப் பதிலளித்த சட்டமா அதிபர் சட்டம் 3 வருடங்கள்தான் அமுலில் இருக்கும் என்று சட்டத்தின் வாசகங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றார். ஆனால் சட்டத்தை அமுல் செய்யும்போது மூன்று வருடங்களுக்கு மேல் பிரிவினைப் போராட்டமும், ஜே. வி. பி.யினரின் கிளர்ச்சியும் நீடிக்கும் என்று அரசாங்கம் எதிர்பார்க்கவில்லை என்று கூறினார்.

ஆள் கொணர்வு மனு இரண்டு வருடங்களுக்கு மேல் சிறிலங்காவில் தாமதப்படுத்தப் படுவதாக மனித உரிமைகள் குழு வினாவியபோது, மனுவல்ல, நீதிமன்றங்களில் வழக்குகள்தான் தாமதமாகின்றன என்று சட்டமா அதிபர் பதிலளித்தார்.

அவசரகாலச் சட்டத்தின்கீழ் அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுவது தற்காலிகமானது என்றார் சட்டமா அதிபர். கருத்துவெளியிடும் உரிமைகள் மறுககப்பட்டிருப்பதையும் சட்டமா அதிபர் ஏற்றுக் கொண்டார்.

சுவரொட்டிகள் பயங்கரவாத சட்டத்தின்கீழ் ஏன் தண்டனைக்குரிய குற்றம் என்றுகேட்கப்பட்டபோது சுவரொட்டிகள் மூலம் கிளர்ச்சிக்காரர் செய்திகளைப் பரிமாறிக் கொள்ளலாம் என்று கூறியுள்ளார்.

தமிழில் பாரம்பரியப் பிரதேசங்கள் தொடர்பான விளக்கத்தை மேற்படி குழு கேட்டபோது, தமிழர் தமது பாரம்பரியப் பிரதேசங்களில் மீளக் குடியமர்வது தொடர்பான சுயநிர்ணய உரிமையைத்தான் அரசாங்கம் ஏற்கிறது என்று சட்டமா அதிபர் சுனில் டி சில்வா தெரிவித்தார்.

சிறிலங்காவின் எழுத்து மூலமான சுருக்க அறிக்கை தனக்கு ஆச்சரியத்தைத் தருவதாக பிரான்ஸ் நாட்டுப் பிரதிநிதியான கிறிஸ்ரின் பெனர் என்ற பெண்மணி தெரிவிக்கிறார்.

## நிவாரணத்திற்கான சீனி அளவு அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தற்போது நடைமுறையில் இருக்கும் உலர்உணவு விநியோகத்தில் வழங்கப்படும் சீனியின் அளவு அதிகரிக்கப்பட்டும் பயறின் அளவு குறைக்கப்பட்டும் விநியோகிக்கப்படவுள்ளது. இந்த விநியோக அளவு அட்டவணை பின்வருமாறு:

| | 1அங் | 2 அங். | 3 அங். | 4 அங். | 5 அங். |
|---|---|---|---|---|---|
| சீனி | 3 4கி. | 11/2கி. | 1 1 2 கி. | 2 கி. | 3 கி. |
| பயறு | 300கிரா. | 400 கிரா. | 1 2 கி. | 600 கிரா. | 700 கிரா. |

மேற்படி பொருள்களுக்கான விலையும், விநியோக அளவுகளும் அடங்கிய பட்டியல் சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் உடனடியாக மேற்படி அளவுகளில் பொருள்களை விநியோகிக்கும்படியும் செயலக புனர்வாழ்வுப்பகுதி கேட்டுள்ளது. (க)

## தனியார் கல்வி நிறுவனம் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். அர்ச்சுனா வீதியில் அமைந்துள்ள தனியார் கல்வி நிறுவனமொன்று நேற்றிரவு விஷமிகளால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளது.

இந்தக் கல்வி நிறுவனத்தில் தீ பரவியதும் அங்கு உடனடியாக விரைந்த மாநகரசபை தீயணைப்புப் படைப் பிரிவினர் அரைமணிநேர முயற்சியின்பின் தீயைஅணைந்தனர். இதனால் பெரும் பொருள் சேதங்கள் தவிர்க்கப்பட்டதுடன், ஏனைய கட்டடங்களுக்குத் தீ பரவுவதும் தடுக்கப்பட்டது.

## க. பொ. த. ( உயர்தரம் )

| | | | |
|---|---|---|---|
| | 12-30 - 3-30 | சிங்களம்-I | |
| 03-05-91 | 8-30 - 11-30 | கிரேக்கம்-I | |
| | | பிரெஞ்சு-I | |
| | 1-30 - 4-30 | அரங்கியலும் நாடகமும்-I | |
| 04-05-91 | 8-30 - 11-30 | அரங்கியலும் நாடகமும்-II | |
| | | கிரேக்கம்-II | |
| | | பிரெஞ்சு-II | |
| | 12-30 - 2-30 | அரங்கியலும் நாடகமும்-III | |
| 06-05-91 | 8-30 - 10-30 | பௌதிகவியல்-I | |
| | 8-30 - 11-30 | கணக்கியல்-I | |
| | | பாளி-I | |
| 06.05.91 | 12.30 - 3.30 | விவசாய விஞ்ஞானவியல் | I |
| | | ஜேர்மன் | I |
| | | ரூஷியன் | I |
| | | உருது | I |
| | | சீனமொழி | I |
| 07.05.91 | 8.30 - 11.30 | பௌதிகவியல் | II |
| | | கணக்கியல் | II |
| | | பாளி | II |
| | | ஜேர்மன் | II |
| | | ரூஷியன் | II |
| | | உருது | II |
| | | சீனமொழி | II |
| | 12.30 - 3.30 | விவசாய விஞ்ஞானவியல் | II |
| | | கிரேக்க உரோம நாகரிகம் | II |
| 08.05.91 | 8.30 - 11.30 | சிங்களம் | I |
| | 12.30 - 3.30 | இந்துசமயம் | I |
| | | கிறிஸ்தவம் | I |
| | | இஸ்லாம் | I |
| | | சமஸ்கிருதம் | I |
| 09-05-91 | 8·30 - 11·30 | சித்திரம் | II |
| | | ஆங்கிலம் | I |
| | 12·30 - 3·30 | இந்துசமயம் | II |
| | | கிறிஸ்தவம் | II |
| | | இஸ்லாம் | II |
| | | சமஸ்கிருதம் | II |
| 13-05-91 | 8·30 - 11·30 | சித்திரம் | III |
| | | ஆங்கிலம் | II |
| | 12·30 - 3·30 | வர்த்தகமும் நிதியும் | I |
| 14-05-91 | 8·30 - 11·30 | புவியியல் | I |
| | 12·30 - 3·30 | வர்த்தகமும் நிதியும் | II |
| 15-05-91 | 8·30 - 11·03 | புவியியல் | II |
| | 12·30 - 3·30 | இந்துநாகரிகம் | I |
| | | இஸ்லாமிய நாகரிகம் | I |
| 16·05·91 | 8·30 - 11·30 | புவியியல் | III |
| | 12·30 - 3·30 | இந்துநாகரிகம் | II |
| | | இஸ்லாமிய நாகரிகம் | II |
| 17-05-91 | 8-30 - 11-30 | அரசியல் மூல தத்துவங்கள்- I | |
| | 1-30 - 4-30 | அளவை விஞ்ஞான முறை - I | |
| 18-05-91 | 8-30 - 11-30 | அரசியல் மூலதத்துவங்கள்- II | |
| | 12-30 - 3 30 | அளவை விஞ்ஞான முறை - II | |

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்தில் உள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.